**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**செய்தி வெளியீட்டு எண்** : 15/2026 **நாள்** : 10.02.2026

**பத்திரிகைச் செய்தி**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி-IC பணிகள்) தமிழ்நாடு பள்ளி கல்வி பணிகளில் அடங்கிய மாவட்ட கல்வி அலுவலர் பதவிக்கான முதன்மைத் தேர்வானது 12.03.2026 முதல் 15.03.2026 வரை நடைபெறும் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது, மேற்கண்ட பதவிக்கான முதன்மைத் தேர்விற்கான தேர்வு தேதிகள் மாற்றியமைக்கப்பட்டு பின்வரும் தேதிகளில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது:

| வரிசை எண். | நாள் | தாள் |
|---|---|---|
| 1. | 22.03.2026 மு.ப | தாள்-I தமிழ் மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) |
| 2. | 23.03.2026 மு.ப | தாள்-II பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்) |
| 3. | 24.03.2026 மு.ப | தாள்-III பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்) |
| 4. | 25.03.2026 மு.ப | தாள்-IVகல்வியியல் (பட்டப்படிப்புத் தரம்) (CBT முறை) |

மேற்கண்ட தேர்வுக்கான தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு (Hall Ticket) தொடர்புடைய அனைத்து தேர்வர்களுக்கும் 12.03.2026 (வியாழன்)-க்குள் பதிவேற்றம் செய்யப்படும். தேர்வர்கள் வழக்கமான முறையில் OTR எண்ணை பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இது குறித்த தகவல்கள், அனைத்து தேர்வர்களுக்கும் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி (E-Mail) / குறுஞ்செய்தி (SMS) மூலமாக தகவல் தெரிவிக்கப்படும்.

**அ. சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,**

**தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்**